RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s524

OPEN ACCESS

# திராவிடத்தில் பெரியாரின் சமூக நீதி சிந்தனைகள்

ப. முருகானந்தம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தி பெஸ்ட் கல்வியியல் கல்லூரி, பவானி-638455, தமிழ்நாடு, இந்தியா.

# Periyar's ideas of Social Justice in Dravidianism

P. Muruganantham [a, *]

[a] Department of Tamil, The Best College of Education, Bhavani-638455, Tamil Nadu, India

* Corresponding Author: muruganantham021983@gmail.com

Received: 29-07-2021
Revised: 09-06-2022
Accepted: 23-06-2022
Published: 25-08-2022

Check for updates

**ABSTRACT**

It was Thanthai Periyar who taught the definition of human life that a life of self-respect is a healthy life. Thanthai Periyar was a self-thinker who fought vigorously for the abolition of caste. He was involved in the struggles to eradicate the inherent discrimination caused by God, religion, and caste, and to create equality for all. One such struggle was the reservation struggle, also called communal rights. It can be seen through this that awareness is given to the Tamils to maintain the victory achieved in the struggle for communal rights. The purpose of this article is to bring out economic discrimination, social differences, the discrimination of man, the one society without caste, which made me a rationalist, the one who advocated a religion other than caste, the principle of inequality, no discrimination, the principle of self-respect, and the countless castes in the same nation.

**Keywords:** Thanthai Periyar, Self-respect, Social Justice, Discrimination

## முன்னுரை

'சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு' என்று மனித வாழ்வுக்கு இலக்கணம் கற்பித்தவர் தந்தை பெரியார் அவர்கள். ஜாதியை ஒழிப்பதில் தீவிரமாகப் போராடியதால் சுயசிந்தனையாளர் தந்தை பெரியார் அவர்கள். அனைவருக்கும் அனைத்தும், பொருளாதார பேதமும், சமூக பேதமும், மனிதனின் பாகுபாடு, ஜாதியற்ற ஒரே சமுதாயம் என்னை பகுத்தறிவுவாதியாக ஆக்கியது, ஜாதி ஒழிய வேறு மார்க்கம் சொன்னவர், ஏற்றத்தாழ்வு கூடாது, பாரபட்சம் காட்டக்கூடாது, சுயமரியாதைக் கொள்கை, ஒரே தேசத்தில் எண்ணற்ற ஜாதிகள் இவற்றை வெளிப்படுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## அனைவருக்கும் அனைத்தும்

கடவுள், மதம், ஜாதியால் உண்டான பிறவி பேதத்தை ஒழித்து 'அனைவருக்கும் அனைத்தும்' என்ற சமத்துவத்தை உருவாக்கும் போராட்டங்களில் ஈடுபட்டார். அப்படிப்பட்ட போராட்டங்களில் ஒன்றுதான் 'வகுப்புரிமை' என்ற இடஒதுக்கீடு போராட்டம். வகுப்புரிமைப் போரட்டத்தில் கிடைத்த வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள தமிழர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுவதை இதன் மூலம் அறியலாம்.

சமூகத்தில் ஏற்றத் தாழ்வு அதுவும் பிறவி அடிப்படையில் என்பது நம் நாட்டில் மட்டுமே உள்ள அநீதியாகும். தாங்கள், மற்றவர்களுக்கு எவ்வகையிலும் தாம் தாழ்ந்தவர்களோ, அறிவு ஆற்றலில் குறைந்தவர்களோ இல்லை என்று புரியவைத்து, சமத்துவ அடையாளமாக, 'திராவிடம்' என்ற

வரலாற்று அடையாளத்தையே மீள் உருவாக்கி எழுச்சி பெற, வாழ்நாள் எல்லாம் தொண்டாற்றிய ஒரே தலைவர் (Thanthai Periyar, 1940). பொது வாழ்வில் தாம் அடியெடுத்து வைத்த காலம் முதல் இறுதி மூச்சுடங்கும் வரை, அவர் ஒரு லட்சியத்தையே மைய்யப்படுத்தினார். என்பதுதான் சமூகநீதி!

## பொருளாதார பேதமும், சமூக பேதமும்

சமூகநீதி தேவை என்ற கூக்குரல் இன்றைக்கு வந்து கொண்டிருக்கின்றது. இதை யாரும்; இல்லையென்று மறுக்கவே முடியாது. பொருளாதார பேதத்திற்கும் சமூக பேதத்திற்கும் உள்ள ஒரு அடிப்படை வேறுபாட்டை நண்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பிறவியினாலே பொருளாதார பேதம் கிடையாது. ஏழையாக பிறந்த ஒருவன் பணக்காரனாக மாறி இருக்க முடியும். பணக்காரனாகப் பிறந்த ஒருவன் ஏழையாக மாற முடியும்.

சமூகநீதி என்பது சமூக அநீதியிலிருந்து விடுதலை பெறுவதாகும். பாதிக்கப்பட்டோருக்கு விடியலைத் தரும் புதுவாழ்வுக்கான திட்டம். சமத்துவத்தையும், சுயமரியாதையையும் இயல்பாகவே இரத்த ஓட்டமாக ஆக்கிடும் அற்புத மாமருந்து! அதுவும் மதத்துக்கும், ஜாதிக்கும் பெயர்போன இந்த நாட்டு மக்களுக்குள் கல்வி அறிவற்று மூடநம்பிக்கையில் ஆழ்த்தி வைக்கப்பட்டிருக்கும் இந்த நாட்டுப் பாமர மக்களுக்குள் பிறவிபேதம் நீக்கப்படாதவரை எப்படிப்பட்ட பொருளாதார சமதர்மமும் கடுகளவு மாற்றத்தையும் உண்டாக்கி விடாது.

## மனிதனின் பாகுபாடு

ஒரு காலத்தில் உலகத்திற்கே நாகரிகம் கற்பித்துக் கொடுத்த நாம் இன்று ஆரியர்களால் பின்னப்படுத்தப்பட்டிருக்கிறோம். நாம் சுதந்திரம், சுயேச்சை பெற்று விட்டால் போதுமா? நாம் மனிதத் தன்மை பெற வேண்டாமா? ஒருவன் உயர் ஜாதி, மற்றொருவன் இழி ஜாதி என்ற பாகுபாடு இருக்கும் வரையிலும், நாம் எப்படி மனிதர்களாகி விட்டோம் என்று கூறிக் கொள்ள முடியும்? ஏழைத் தன்மை, பணக்காரத் தன்மை என்கிற இரண்டு தன்மையும் உலகில் இருக்கக் கூடாது என்று அவைகளை அடியோடு அழிப்பது நல்ல வேலையா அல்லது அத்தன்மைகள் எந்த ரூபத்திலாவது என்றும் இருக்கும்படி சீர்திருத்தம் செய்வது நல்ல வேலையாகும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் சம சுதந்திரம் அடைவதோடல்லமால் உயர்ந்த நிலைமையையும் அடைய ஆசைப்படுவது ஒவ்வொரு ஜீவனின் சுபாவமாகும். அப்படியிருக்க, உன்னுடைய சமத்தவத்திற்கு நானும் பிரயத்தனப்படமாட்டேன். நீ பிரயத்தனப்பட்டால் அதையும் ஒழிப்பதற்கு நான் பிரயத்தனப்படுவேன் என்று சொல்வது சமத்துவ மனித குலத்துக்கு ஏற்றதா? வகுப்பு பேதம் இருக்கக் கூடாது என்பவர்கள் தோற்று, வகுப்பு பேதம் இருக்க வேண்டும் என்பவர்கள் வெற்றி பெற்றால் வகுப்பு வாதம் தோற்றதா அல்லது வகுப்புவாதம் வெற்றி பெற்றதா என்றுதான் கேட்கின்றோம்.

உன் திருவள்ளுவரும் திருக்குறளும் ஆரியத்தால் போற்றப்படாமைக்கக் காரணம், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான் என்ற கூற்றுத்தான் என்பதை உணரமுடிகிறது. தொழிலாளி என்று ஒரு கூட்டம் ஏன் இருக்க வேண்டும்? முதலாளி என்று ஒரு கூட்டம் ஏன் இருக்க வேண்டும்? இது யாருடைய கட்டளை? என்ன அவசியத்தைப் பொறுத்தது? என்று அவர்களை நாம் கேட்கிறோம் (Veeramani, 2018).

வகுப்புவாதம் என்பது வகுப்பு பேதத்தில் இருந்தும், வகுப்புப் பிரிவினையில் இருந்தும்தான் உண்டானதே தவிர, மற்றபடி அது ஆகாயத்தில் இருந்து தொப்பென்று குதித்தது என்ற யாரும் கூற முடியாது.

## ஜாதியற்ற ஒரே சமுதாயம்

ஜாதி ஒழிய வேண்டும் என்பது என்னுடைய கருத்து. சிறு வயது முதல் ஜாதி ஒழிய வேண்டும் என்பதில் கருத்து கொண்டவன் நான். நாற்பதாண்டு காலமாக ஜாதி ஒழிய வேண்டும், மதம் ஒழிய

வேண்டும், வேதம் ஒழிய வேண்டும், மனுதர்மம் வர்ணாசிரம தர்மம் ஒழிய வேண்டும். சாஸ்திரம் ஒழிய வேண்டும் என்று சொல்லியும் எழுதியும் வந்தவன் (Veeramani, 2018).

படிப்பு, மத சம்பந்தம் ஆகியவைகளில் இம்மாதியான நிர்பந்தம் இருப்பதோடு மாத்திரமல்லாமல், மனித வாழ்க்கையிலும் மக்களைத் தனித்தனி ஜாதிகளாகப் பிரித்ததோடல்லாமல், அவற்றில் உயர்வு தாழ்வும் ஒருவரை ஒருவர் தொடாமல், நெருங்காமல், காண முடியாமல் செய்வித்து, ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு பிறவித் தொழிலையும் ஏற்படுத்தி, அவைகளையேதான் அவ்வகுப்பைச் சேர்ந்தவன் செய்து தீர வேண்டும் என்று நிர்பந்தப்படுத்தப்படலாமா?

## என்னை பகுத்தறிவுவாதியாக ஆக்கியது

என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு சமுதாய சீர்திருத்தத் தொண்டன். நான் அரசியலில் பல மாறுதலில் ஈடுபட்டிருக்கலாம் என்றாலும், சமுதாயத் துறையில் அதுதான் என்னைப் பகுத்தறிவுவாதியாக ஆக்கியது.

மலை உச்சியில் இருக்கிற ஜாதிகளும், மலையின் நடுத்தளங்களில் வாழும் ஜாதிகளும், மலைக் குகைகளில் வாழும் ஜாதிகளும், மலைச்சரிவுகளில் வாழும் ஜாதிகளும், மலை அடிவாரத்தில் வாழும் ஜாதிகளும், சமமான ஒரே இடத்தில் வந்து ஒரே நாகரிகம், ஒரே விதமான கல்வி, ஒரே விதமான சுதந்திரம், ஒரே விதமான ஒழுக்கம் முதலியவைகளைப் பெறுவார்களானல், அவர்களிடமிருந்த ஜாதி வித்தியாசம், கொள்கை வித்தியாசம் முதலியவைகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிந்து எல்லோரும் ஒரே சகோதர்களாக ஆக முடியும் என்று கருத்தை ஆதரித்து வருகிறோம் (Veeramani, 2018).

## ஜாதி ஒழிய வேறு மார்க்கம் சொன்னவர்

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்பவர்களில் யாரும், இதுவரை அது கூடாது என்பதற்கு சரியான காரணமோ அல்லது எல்லா மக்களுக்கும் சமத்துவமும் சம சந்தர்ப்பமும் கிடைக்கும்படியான வேறு மார்க்கமோ எடுத்துக் கூறவில்லை.

நமது நாட்டில் சிறிது அரசியல் உரிமை கிடைத்ததன் பலனாகவும், அரசியல் கிளர்ச்சிகள் கொஞ்சம் அதிகப்பட்டதன் பலனாகவும், கல்வி, அரசாங்க உத்தியோகம், ஸ்தல ஸ்தாபன பதவிகள் முதலியவைகளில் முன்னேறாமல் இருந்த ஒவ்வொரு ஜாதியினரும் விழித்துக் கொண்டனர். கல்வி, பட்டம், பதவி முதலியவைகளில் முன்னேறி இருக்கும் வகுப்பாரக் கண்டு தாமும் அவர்களைப்போல் ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு தேசத்தில் அதிகாரம், பட்டம், பதவி, முதலியவைகளில் எல்லா வகுப்புகளுக்கும் சம பங்கு இருக்கு வேண்டும் என்று கேட்பதும் அதற்காகப் போராடுவதும் நியாயமேயாகும். இந்தக் காரணங்களுக்காக நமது நாட்டில் வகுப்பு மாநாடுகள் கூட ஆரம்பித்தன (Veeramani, 2019).

## ஏற்றத்தாழ்வு கூடாது

பதவிகள் வழங்குவதில், உத்தியோகம் வழங்குவதில் அரசாங்கம் எந்த ஜாதியாருக்கும், எந்த மதத்தினருக்கும் பாரபட்சம் காட்டக் கூடாது. ஒவ்வொரு ஜாதிக்கும், ஒவ்வொரு மதத்திற்கும் அதைச் சேர்ந்த மக்கள் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ அந்த எண்ணிக்கை விகிதப்படி பதவி, உத்தியோகம் முதலியவைகளை வழங்க வேண்டும் (Veeramani, 2018).

## பாரபட்சம் காட்டக்கூடாது

இந்தியாவில் ஜாதி, மத, வகுப்பு காரணமாக பிரிவுபட்ட மக்கள் பிணக்குப்பட்ட மக்கள் 1885 ஆம் வருடம் காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்ட காலத்திலேயே இருந்து இருக்கிறார்கள். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாது என்பவர்களில் யாரும் இதுவரை அது கூடாது என்பதற்கு சரியான காரணமோ

அல்லது எல்லா மக்களுக்கும் சமத்துவமும் சம சந்தப்பமும் கிடைக்கும்படியான வேறு மார்க்கமோ எடுத்துச் சொன்னவர் யாரும் இல்லை.

சமூக நீதி எண்ணங்கள் - இங்கே கிளர்ந்தெழாமல் இருந்திருக்குமேயானால் - இங்கே என்னைப் போன்றவன் பேச வந்திருக்க முடியாது. சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கும் சமவாய்ப்பு என்ற சொல்லை அந்தச் சொல்லின் பொருளை மட்டும் வைத்துக் கொண்டு பிடிவாதமாக பார்க்கக்கூடாது. சம வாய்ப்பு இல்லாத ஒரு சமுதாயத்தில் சமவாய்ப்பு எப்படித் தரப்பட வேண்டும் என்ற கோணத்தில் இந்தப் பிரச்சினைகள் அணுக வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிறார்.

மக்கள் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கச் செய்யும் நீதி வழங்கவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதில் முதலில் சமூகநீதி, அடுத்துதான் பொருளாதார நீதி, அரசியல் நீதி என்று முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. தனியே சமூகநீதியை நிலைநாட்ட 1925 ஆம் ஆண்டு இறுதியில் சுயமரியாதை இயக்கத்தை நிறுவி, சமூக நீதியின் முழக்கமாக அனைவருக்கும் அனைத்தும் என்ற கொள்கையை உருவாக்கினார் (Veeramani, 2018).

## சுயமரியாதைக் கொள்கை

சுயமரியாதைக்காரர்களுடைய லட்சியமும் கொள்கையும் எவ்வளவு உன்னதமாய் இருந்தாலும் சரி, இந்தியாவைப் பொருத்தவரை - சிறப்பாகத் தமிழ்நாட்டைப் பொருத்தவரை - ஜாதி பேதத்தை ஒழித்து அடியோடு அழிக்காவிட்டால் உண்மையான சுயமரியாதைக்குச் சிறிதுகூட இடமில்லை.

ஜாதிப் பிரிவு இருக்குமிடத்தில் எந்த அரசியலும் பொருளியலும் எப்படி பங்கிட்டுக் கொடுத்தாலும் ஒரே வருடத்தில் பழையபடி ஆகிவிடும். ஒவ்வொரு ஜாதியும் தாம் தாம் முயற்சி செய்து சம சுதந்திரம் பெறுவதன் மூலம் ஜாதி ஒழியும் என்னும் நோக்கத்தோடுதான் நாம் ஜாதி மகாநாடுகளுக்கு ஆதரவளிப்பதுமாகும். எண்ணற்ற ஜாதிகளும் எல்லையில்லா கொள்கைகளும் உள்ள ஒரு தேசத்தில் இவைகளை ஒன்றுபடுத்துவதற்கு இதுவே சிறந்த வழியாகும் என்பது அறிவுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதாகும்.

## ஒரே தேசத்தில் எண்ணற்ற ஜாதிகள்

இந்தச் சமூக நீதிப் பிரச்சினை நீண்ட நெடுங்காலப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள் வாதத்தை எடுத்து வைப்பது என்பது கூட ஒரு வகையில் இது நான் பிறந்த இடம். இங்கே பேசுவதிலே எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

நாட்டுக்கு நாடு அதிகார ஆதிக்கப் பேராசை இல்லாமல் அதைத் தனித்தனியாய் பிரித்து விட்டுவிடுதாய் இருந்தால் கலகமே விளைய இடமில்லை என்பதும், வகுப்புக்கு வகுப்பு, ஜாதிக்கு ஜாதி ஆதிக்கம் அதிகாரம் செய்ய சூழ்ச்சி செய்யாமல் விகிதாச்சாரம், கல்வி, பொருளாதார வசதி, உத்தியோகம், பதவி இருக்கும்படி செய்வது என்பதில் உறுதியாக இருப்போம் (Veeramani, 2018).

பொதுவுடைமை வேறு பொது உரிமை வேறு. பொதுவுடைமை என்பது சமபங்கு என்பதாகும். பொதுவுரிமை என்பது சம அனுபவம் என்பதாகும். நமது நாட்டில் பிறவியிலேயே பல படிகள் இருப்பதாலும் அதனாலேயே நாம் சதா கடினப்பட்டாலும் தொழில், வாழ்க்கையில் உள்ள படிகளை நாம் கவனிக்கவே நேரமும், ஞாபகமும் இல்லாதவர்களாய் பிறவிப் படிகளையும், தொழில் படிகளையும் கடந்தவர்களாகத் தான் இருக்க வேண்டும். அவ்விரண்டு படிகளையும் ஒழிந்த நிலைதான் சமதர்ம நிலையென்று சொல்லப்படுவதாகும்.

## முடிவுரை

இன்றைய வாழ்க்கை நிலைமையைப் பார்த்தால் மனிதன் வேலை செய்வதற்காக ஒரு தொழில் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டுமென்றுதான் ஏற்படுகின்றது. இதுவும், தான் வயிற்றுக்கு வேண்டிய

அளவு கூட கிடைக்க முடியாத கூலிக்கு முழுநேரத்தையும் செலவு செய்து பாடுபட வேண்டும். சுருக்கமாக ஒரு வார்த்தையில் கூறினால் இன்றைய வாழ்வு பகுத்தறிவில்லாத வாழ்வு மிருக வாழ்வை விட மிக மோசமான வாழ்வேயாகும்.

## References

Thanthai Periyar, (1940) Thanthai Periyar Samooga sinthanaikal, Dravidar Kazhagam, Erode, India.

Veeramani, K., (2018) Tamilnatil Samooganeedhi varalaru oru paarvai, Dravidar kalaga veeliyeedu, Chennai, India.

Veeramani, K., (2018) Samooganeedhi, Dravidar kalaga veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License